29 ஜனவரி 2026 • வியாழன்

TAMIL MURASU
VOICE OF THE COMMUNITY

# தமிழ் முரசு

சமூகத்தின் குரலாக, நூற்றாண்டை நோக்கி

MDDI (P) 001/04/2025

தோற்றம்: 1935 நிறுவனர்: தமிழவேள் கோ.சாரங்கபாணி


sph media

சிங்கப்பூர்



தைப்பூசத்துக்கான பதிவு முடிந்ததால் பக்தர்கள் ஏமாற்றம் 4

இந்தியா



ஹெலிகாப்டர் விபத்தில் அஜித் பவார் மரணம் 6

உலகம்



மலேசிய அமலாக்கத் துறை உயரதிகாரிகளுக்கு அன்வார் கெடு 8

# மூத்த ஊழியர்களுக்கான ஆதரவை மேம்படுத்த என்டியுசி அழைப்பு



தேசியத் தொழிற்சங்கக் காங்கிரசின் (என்டியுசி) துணைப் பொதுச் செயலாளர் டெஸ்மண்ட் டான், டான் டோக் செங் மருத்துவமனையில் உள்ள மூத்த ஊழியரைச் சந்தித்து கைகுலுக்கினார். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

மூத்த ஊழியர்களுக்கான ஆதரவை அரசாங்கமும் முதலாளிகளும் மேம்படுத்த வேண்டும் என்று தேசியத் தொழிற்சங்கக் காங்கிரசின்(என்டியுசி) துணைப் பொதுச் செயலாளர் டெஸ்மண்ட் டான் வலியுறுத்தியுள்ளார்.

வரும் பிப்ரவரி 12ஆம் தேதி நாடாளுமன்றத்தில் பிரதமரும் நிதியமைச்சருமான லாரன்ஸ் வோங் எதிர்வரும் நிதி ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்யவுள்ளார். அதைக் குறிப்பிட்டு திரு டான் தமது கருத்தை முன்வைத்துள்ளார்.

மூத்த ஊழியர்களைச் சந்திக்க டான் டோக் செங் மருத்துவமனைக்குப் புதன்கிழமை (ஜனவரி 28) சென்றிருந்தபோது திரு டான் இவ்வாறு கூறினார்.

வயதான மூத்த ஊழியர்களுக்கு வேலை மறுவடிவமைப்பு, திறன்களை மேம்படுத்துதல், மூத்தோரை உள்ளடக்கிய நடைமுறைகள் ஆகியவற்றை நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் சொன்னார்.

“சிங்கப்பூரின் ஊழியரணி மூப்படைந்து வருகிறது, அதே போல் பல துறைகளில் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) வேலைகளின் தேவையை மாற்றியமைத்து வருகிறது. அதனால் முதலாளிகள், தொழிற்சங்கங்கள், அரசாங்கம் ஆகியவை மூத்த ஊழியர்களுக்குச் சரியான தளத்தை அமைத்து அவர்களைச் சிறப்பாகச் செயல்பட வைத்துத் தொடர்ந்து பணியில் ஈடுபட வைக்க வேண்டும்,” என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அண்மையில் தேசியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் ஆய்வு நடத்தியது. அதில் 70 வயதைத் தாண்டியும் வேலை செய்ய மூத்த ஊழியர்கள் விரும்புகிறார்கள் என்பது தெரிய வந்தது.

உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் விழிப்புடன் இருக்கப் பணி முக்கியமானது என்று மூத்தோர் குறிப்பிட்டனர். வேலையிடத்தில் நீக்குப்போக்கான சூழலையும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

2025ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அந்த ஆய்வில் 591 பேர் கலந்துகொண்டனர். ஆய்வில் அனைத்து வயதுப் பிரிவினரும் இருந்தனர்.

பிரதமர் அலுவலகத்தில் மூத்த துணையமைச்சராகவும் உள்ள திரு டான், முதலாளிகள் தேசியத் தொழிற்சங்கக் காங்கிரசுடன் இணைந்து நிறுவனப் பயிற்சிக் குழுக்களை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அதன் மூலம் மூத்த ஊழியர்களுக்கான வேலை மறுவடிவமைப்பை மேற்கொள்ளமுடியும் என்று அவர் சொன்னார்.

நிறுவனப் பயிற்சிக் குழுக்களை அமைக்கும் நிறுவனங்களுக்கு தேசியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் மானியங்களையும் வழங்குகிறது.

மூத்த ஊழியர்களைப் பணியில் அமர்த்தவும், பயிற்சி வழங்கவும் அவர்களை வேலையில் தக்க வைத்துக்கொள்ளும் நடவடிக்கைகளை அரசாங்கம் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும் என்றும் திரு டான் கேட்டுக் கொண்டார்.

## உள்ளூர் நிறுவனங்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டும் என்டர்பிரைஸ்எஸ்ஜி




என்டர்பிரைஸ் சிங்கப்பூர் அமைப்பின் வருடாந்தர செய்தியாளர் சந்திப்பில் பேசிய அமைப்பின் நிர்வாக இயக்குநர் சிண்டி கூ, தலைவர் லீ சுவான் டெக் (வலது). **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

மீள்திறனுடன் செயல்படவும் புதிய வளர்ச்சி வாய்ப்புகளைத் தேடவும் சிங்கப்பூர் நிறுவனங்களுக்கு உதவ எடுக்கப்படும் முயற்சிகளை வலுப்படுத்த என்டர்பிரைஸ் சிங்கப்பூர் அமைப்பு (என்டர்பிரைஸ்எஸ்ஜி) திட்டமிட்டுள்ளது. பொருளியல் சூழலில் நிச்சயமற்ற நிலை நிலவும் இக்காலகட்டத்தில் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள என்டர்பிரைஸ் சிங்கப்பூர் அமைப்பு முடிவெடுத்துள்ளது.

என்டர்பிரைஸ் சிங்கப்பூர், வெளிநாடுகளில் வர்த்தகத்தை விரிவாக்கம் செய்யச் சிங்கப்பூர் நிறுவனங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு வழங்கப்படும் ஆதரவுகளை அதிகரிக்க இருக்கிறது.

இதற்காக வெளிநாடுகளில் தனது செயல்பாடுகளை அது அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வர்த்தகம் செய்ய இலக்கு கொண்டுள்ள உள்ளூர் நிறுவனங்களுக்கு அடித்தள ஆதரவு வழங்க, புதிய வெளிநாட்டு நிலையங்களை இயக்கவும் வர்த்தகச் சங்கங்களுடன் இணைந்து செயல்படவும் என்டர்பிரைஸ் சிங்கப்பூர் அமைப்பு முடிவெடுத்துள்ளது.

“தற்போதைய நிலவரப்படி 35 நகரங்களில் அலுவலகங்களை இயக்கி வருகிறோம். இந்த ஆண்டு அமெரிக்காவில் மேலும் இரண்டு அலுவலகங்களைத் திறக்க இருக்கிறோம். தேவை ஏற்பட்டால் பிற நாடுகளிலும் புதிய அலுவலகங்களைத் திறக்க திட்டமிட்டுள்ளோம். துபாயிலும் பெங்களூரிலும் இரண்டு புதிய சிங்கப்பூர் என்டர்பிரைஸ்எஸ்ஜி நிலையங்களைத் திறக்க சிங்கப்பூர் வர்த்தகச் சம்மேளனத்துடன் இணைந்து செயல்பட்டோம்,” என்று என்டர்பிரைஸ் சிங்கப்பூர் அமைப்பின் தலைவர் லீ சுவான் டெக் புதன் கிழமையன்று (ஜனவரி 28) தெரிவித்தார். என்டர்பிரைஸ் சிங்கப்பூர் அமைப்பின் வருடாந்தர செய்தியாளர் சந்திப்பில் அவர் பேசினார்.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் அவற்றின் வர்த்தகத்தை உருமாற்றி விரைவாகச் செயல்படும் ஆற்றலை மேம்படுத்த உதவுவதில் கவனம் செலுத்த இருப்பதாக என்டர்பிரைஸ் சிங்கப்பூர் அமைப்பு கூறியது.

இதற்காக வர்த்தகச் சங்கங்கள் மற்றும் தளவாடங்கள், உற்பத்தி, ஒட்டுமொத்த வர்த்தகம் ஆகிய துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களுடன் பயிலரங்குகளை நடத்தியிருப்பதாகத் திரு லீ தெரிவித்தார்.

மேலும் செய்தி - பக்கம் 4


8 887181 530005 >

60 காசு

தமிழ் முரசு சந்தாவுக்கு அழைக்கவும்: 6388-3838

உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை

## 14 வயது சிங்கப்பூர்ச் சிறுவனுக்குக் கட்டுப்பாட்டு உத்தரவு



14 வயதுச் சிறுவன் ‘ஐஎஸ்ஐஎஸ்’ ஆதரவுக் காணொளிகளை உருவாக்கினார். **படம்: உள்நாட்டுப் பாதுகாப்புப் பிரிவு**

14 வயது சிங்கப்பூர்ச் சிறுவன் மீது உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கட்டுப்பாட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுக்குச் சென்று ஆயுதமேந்தி வன்முறையில் ஈடுபடவும் உயிரை மாய்த்துக்கொள்ளவும் அவர் தயாராக இருந்தார்.

சிறுவன், உயர்நிலை மூன்றாமாண்டு மாணவர். கடந்த ஈராண்டில் பயங்கரவாதம் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காகக் கட்டுப்பாட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள மூன்றாம் 14 வயது மாணவர் அவர். குடும்பத்தில் யாராவது நெருக்கமானவர்கள் தீவிரவாதப் போக்கிற்கு மாறினால், அதிகாரிகளின் உதவியை நாடுமாறு உள்நாட்டுப் பாதுகாப்புப் பிரிவு மக்களைக் கேட்டுக்கொண்டது.

சிறுவன், 12 வயதாக இருந்தபோது, 2023ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இணையத்தின் மூலம் ஐஎஸ்ஐஎஸ் போராளித்துவ அமைப்பின் தீவிரவாதச் சித்தாந்தங்களால் ஈர்க்கப்பட்டார்.

அவர், ஐஎஸ் குறித்துக் கூடுதல் தகவல்களைத் தேடினார். பின்னர் ஐஎஸ் தொடர்பான மேலும் பல பதிவுகள் இணையத்தில் அவரைத் தேடிவரத் தொடங்கின. சமூக ஊடகத்தின் மூலம் ஐஎஸ் ஆதரவு இணையத் தளத்தை மாணவர் கண்டார். அதன் தீவிரவாதச் சித்தாந்தப் பதிவுகளை அன்றாடம் ஏறக்குறைய ஒன்பது மணி நேரம் படித்தார்.

ஒரே ஆண்டில் அவர், ஐஎஸ் அமைப்பின் தீவிர ஆதரவாளரானார். விசுவாசியாக இருப்பதற்கான உறுதிமொழியை எடுத்துக் கொண்ட அவர், தம்மை ஐஎஸ் உறுப்பினராகக் கருதினார்.

இணைய விளையாட்டுகளைத் தயாரிக்க உதவும் ரோப்ளோக்ஸ் தளத்திலும் கோர்போக்ஸ் இணைய விளையாட்டிலும் ஐஎஸ் ஆதரவுக் காணொளிகளை மாணவர் உருவாக்கினார்.

ராணுவத் தளங்கள் மீதான பாவனைத் தாக்குதல்கள் அந்தக் காணொளிகளில் இடம்பெற்றிருந்தன.

இன்னும் 10 ஆண்டுகளில் சிரியா, ஆப்கானிஸ்தான், ஆப்பிரிக்கா, ஈராக், இந்தோனீசியாவின் பாலித் தீவு முதலியவற்றுக்குப் பயணம் செய்து போர்க்களத்தில் மடிய மாணவர் திட்டமிருந்ததாக உள்நாட்டுப் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்தது.

சென்ற ஆண்டு (2025) நவம்பரில் சிறுவனுக்கு எதிராகக் கட்டுப்பாட்டு உத்தரவை உள்நாட்டுப் பாதுகாப்புப் பிரிவு பிறப்பித்தது. அதன்படி அவர் வெளிநாட்டுக்குச் செல்லவோ அனுமதியின்றிச் சமூக ஊடகத்தைப் பயன்படுத்தவோ முடியாது.

இதற்கிடையே, சென்ற ஆண்டு டிசம்பரில், 18 வயது சிங்கப்பூரரைத் தடுப்புக் காவலில் இருந்து விடுவித்ததாக உள்நாட்டுப் பாதுகாப்புப் பிரிவு புதன் கிழமை (ஜனவரி 28) தெரிவித்தது.

அல் காய்தா, ஐஎஸ் ஆதரவாளரான அவர், சிங்கப்பூரில் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தார்.

கடும் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் இளையர் நல்ல முன்னேற்றத்தை வெளிப்படுத்தியதாகவும் அவரால் பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என்று கணிக்கப்பட்டதாகவும் உள்நாட்டுப் பாதுகாப்புப் பிரிவு கூறியது.

மேலும், சிங்கப்பூரர்கள் மூவர் மீதான கட்டுப்பாட்டு உத்தரவுகளும் முடிவுக்கு வந்தன. 44 வயது மக்ஷோம் முகம்மது ஷா, 17 வயது ஆடவர், 63 வயது முகம்மது காலிம் ஜா:ஃபர் ஆகியோரே அவர்கள்.